தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர் : 02 | இதழ் :193 | 4 - பக்கம் | 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6




**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்**
**தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை.**

*விளக்கம்:*

எந்தெந்த வழிகளில் ஆராய்ந்தாலும் வாழ்க்கையில் ஒழுக்கமே சிறந்த துணை என்பதால், எத்தகைய துன்பத்தை ஏற்றாவது அதைக் காக்க வேண்டும்.

## காங்கிரஸ், ஆம் ஆத்மிக்கு மட்டுமல்ல, பாஜகவுக்கும் டெல்லி மக்கள் தீர்ப்பு ஒரு பாடமே... எப்படி?



டெல்லி சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது முதலே ஆம் ஆத்மி கட்சிக்கு இந்தத் தேர்தல் மிகப் பெரிய சவாலாக இருக்கும் என்றே பெரும்பாலான அரசியல் விமர்சகர்கள் கணித்தனர். தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் பலவும் வெற்றி பாஜகவுக்கு என கைகாட்டின. ஆனால், ஆம் ஆத்மி கட்சியின் நிறுவனரும், முன்னாள் முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் தான் போட்டியிட்ட தொகுதியில் தோல்வியடையும் வகையிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறாமல் போகும் என்று யாரும் கணிக்கவில்லை. இதுதான் ஜனநாயகத்தின் வலிமை. மக்கள் தீர்ப்பை யாராலும் அவ்வளவு துல்லியமாகக் கணித்துவிட முடியாது என்று உணர்த்துவது போல் டெல்லி சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. இந்த முடிவுகள் சொல்வது என்னவென்று அலசுவோம். முதலில் இண்டியா கூட்டணி... - நடந்தது என்னவோ சட்டப்பேரவைத் தேர்தல்தான் என்றாலும், இதன் முடிவை ஒரு பரந்துபட்ட கண்ணோட்டத்துடன் அணுகுவது அவசியமாகிறது. "ஆம் ஆத்மி இந்தளவுக்கு பின்னடைவைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இண்டியா கூட்டணி கட்டுக்கோப்பாக இல்லை. ஆம் ஆத்மி, காங்கிரஸ் ஒற்றுமையாக இந்த தேர்தலை சந்திக்கவில்லை. இண்டியா கூட்டணித் தலைவர்கள் இதுகுறித்து விரைவில் கலந்தாய்வு செய்ய வேண்டும். இண்டியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஈகோ பிரச்சினைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு, நாட்டையும் மக்களையும் காப்பாற்றுகிற திசையில் சிந்திக்க வேண்டும்" என்று விசிக தலைவர் திருமாவளவன் கூறியதையும், "இண்டியா கூட்டணி மக்களவைத் தேர்தலுக்கு மட்டும் தான் உருவாக்கப்பட்டது என்றால் அதனை முடித்துக்கொள்வது பற்றி முடிவெடுக்கலாம்" என்று ஏற்கெனவே தேசிய மாநாட்டுக் கட்சியின் செயல் தலைவர் உமர் அப்துல்லா கூறியதையும் கவனிக்க வேண்டும்.

## உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடம்; 80-வது இடத்தில் இந்தியா!



புதுடெல்லி: சிங்கப்பூர் உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தப் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் 193 இடங்களுக்குப் பயணிக்க முடியும். இந்தியாவுக்கு என்ன இடம் என்பது குறித்தும் காண்போம்.

உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசைப் பட்டியல் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் பாஸ்போர்ட் மூலம் எத்தனை நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம் என்பதன் அடிப்படையில் இந்த தரவரிசை நிர்ணயிக்கப்படுகிறது. இதுகுறித்த பட்டியலை ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் (2025 Henley Passport Index) தற்போது வெளியிட்டுள்ளது.

அந்தப் பட்டியலில், உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்கள் பட்டியலில், சிங்கப்பூர் முதலிடத்திலும், ஜப்பான் மற்றும் தென் கொரியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. சிங்கப்பூர் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் 193 இடங்களுக்குப் பயணிக்க முடியும். ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளின் பாஸ்போர்ட்டுகளை வைத்து விசா இல்லாமலே 190 நாடுகளுக்குச் செல்லலாம்.

## உ.பி.யின் மில்கிபூர் இடைத்தேர்தல்: நீயா நானா போட்டியில் பாஜக வெற்றி முகம்!



லக்னோ: உத்தரப் பிரதேச மாநிலத்தின் மில்கிபூர் இடைத்தேர்தலில் ஆளும் பாஜக மற்றும் சமாஜ்வாதி கட்சிக்கு இடையே நடந்த நீயா நானா போட்டியில், பாஜக வெற்றியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. 9 சுற்றுகள் வாக்கு எண்ணிக்கை முடிவில், பாஜக வேட்பாளர் சந்திரபான் பஸ்வான் 47,176 வாக்குகள் பெற்றிருந்தார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சமாஜ்வாதி கட்சியின் அஜித் பிரசாத் 25,000 வாக்குகள் பின்தங்கி இருந்தார். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படும் அயோத்தியின் ஒரு பகுதியாக இருக்கும் மில்கிபூர் தொகுதியின் நடந்த இடைத்தேர்தல் சமாஜ்வாதி கட்சிக்கும், ஆளும் பாஜகவுக்கும் இடையில் கவுரவப் பிரச்சினையாக பார்க்கப்பட்டது. மில்கிபூர் தொகுதியை சமாஜ்வாதி கட்சியிடமிருந்து பாஜக கைப்பற்ற இருக்கும் இந்த நிலையில், அத்தொகுதியின் பாஜக வேட்பாளர் சந்திரபான் பஸ்வான், பிரதமர் மோடி மற்றும் முதல்வர் யோகிக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

அவர்கூறுகையில், "பிரதமர் மோடிக்கும், முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாக்காளர்களின் ஆதரவுக்காக அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மிகப் பெரிய அளவிலான ஆதரவும் மரியாதையும் எனக்கு கிடைத்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

## ஓய்வூதிய திட்ட ஆய்வுக்கான குழுவை வாபஸ் பெற முதல்வர் ஸ்டாலினுக்கு அரசு அலுவலர் ஒன்றியம் வலியுறுத்தல்



சென்னை: ஓய்வூதிய திட்டம் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவை வாபஸ் பெற வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலினை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஒன்றிய மாநில தலைவர் த.அமிர்தகுமார் வெளியிட்டுளள அறிக்கை: கடந்த 2021-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலின் போது திமுகவின் தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை இம்முறை கட்டாயம் அமல்படுத்துவோம் என கூறியதை ஏற்று முழுமையாக கடந்த காலங்களில் போல இல்லாமல் நிச்சயம் அமல்படுத்துவார்கள் என நம்பினோம்.

பலமுறை அரசுக்கு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் கோரிக்கை வைத்த போது, நிதி நிலைமை சற்று சீரடைந்ததும், நிதி சார்ந்த பல கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அரசு கூறி வந்தது. மற்ற மாநிலங்களில் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படுவதை போல் நமது மாநிலத்திலும் அமல்படுத்துவார்கள் என முழுமையாக எண்ணினோம். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக பழைய ஓய்வூதிய திட்டம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஆகியவை குறித்து ஆய்வு செய்ய மூன்று உறுப்பினர்கள் உள்ளடக்கிய ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது.

இது தமிழகத்தில் பணியாற்றும் ஒட்டுமொத்த அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பேரிடியாக அமைந்தது. அதுவும் இக்குழுவின் காலம் ஒன்பது மாதம் என்பது மிகுந்த ஏமாற்றத்தை தந்தது. காரணம் குழு அமைப்பதே கோரிக்கையை நிறைவேற்றாமல் காலம் கடத்தும் செயல் என்பதை கடந்த காலங்களில் பலமுறை நாம் கண்ட உண்மையாகும்.

கடந்தாண்டு பிப்.13-ம் தேதி அமைச்சர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், முதல்வர் கவனத்துக்கு கொண்டு சென்று பழைய ஓய்வூதிய திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தனர். இதை நம்பிய நிலையில், இந்த அறிவிப்பு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த குழு அறிவிப்பை வாபஸ் பெற வேண்டும். பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அரசு அமல்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ,ஈரோடு கிழக்கில் நிராகரிக்கப்பட்ட நாதகவின் வெறுப்பு அரசியல், - முத்தரசன் கருத்து



சென்னை: "ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் முடிவு, அடுத்து வரும் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வரலாறு காணாத வெற்றி பெறும் என்பதற்கான முன்னறிவிப்பைத் தந்துள்ளது" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஆதரவுடன் களம் இறங்கிய திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் தொகுதி வாக்காளர்களின் ஒருமுகமான ஆதரவைப் பெற்று, மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலிலும், 2023 இடைத்தேர்தலிலும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஈரோடு கிழக்கு தொகுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்றது. இந்த முறை நடைபெற்ற இடைத்தேர்தலின் அரசியல் முக்கியத்துவம் கருதி, திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் ஒருமனதாக அறிவிக்கப்பட்டார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வலிமையும், தமிழ்நாடு அரசின் சாதனைகளும் மக்களின் பேராதரவு பெற்றிருப்பதை அறிந்த அதிமுக தேர்தல் களத்திற்கே வராமல் ஒதுங்கிக் கொண்டது. சமூக சீர்திருத்தப் புரட்சியாளர் பெரியார் ஈவெரா குறித்தும், திராவிட இயக்க கருத்தியல் மற்றும் நோக்கங்களை இழிவுபடுத்தி, அவமதித்து, அநாகரிக அரசியலை முன்னெடுத்த நாம் தமிழர் கட்சியின், சங் பரிவார் கும்பலுக்குரிய வெறுப்பு அரசியலை ஈரோடு கிழக்கு தொகுதி மக்கள் முற்றாக நிராகரித்திருக்கிறார்கள்.

அடுத்த ஆண்டு (2026) நடைபெற இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி பெறப்போகும் வரலாறு காணாத வெற்றிக்கு கட்டியம் கூறியுள்ள ஈரோடு கிழக்கு தொகுதி மக்களுக்கும், கூட்டணி வேட்பாளர் வெற்றிக்கு பாடுபட்ட தலைவர்கள், அமைச்சர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நன்றி பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது" என்று அவர் கூறியுள்ளார்.

## ஓய்வூதிய திட்ட ஆய்வு குழுவுக்கு எதிர்ப்பு: கறுப்பு பேட்ஜ் அணிந்து பணியாற்றிய தலைமைச் செயலக பணியாளர்கள்



சென்னை: தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஓய்வூதிய திட்ட ஆய்வுக் குழுவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, தலைமைச் செயலக பணியாளர்கள் கறுப்பு பட்டை அணிந்து நேற்று பணியாற்றினர்.

தமிழகத்தில் புதிய ஓய்வூதிய திட்டத்துக்கு பதில், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதற்கிடையில், மத்தியில் மீண்டும் ஆட்சியை பிடித்த பாஜக, ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சூழலில், ஓய்வூதிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரைக்க, ஊரக வளர்ச்சித் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் 3 அதிகாரிகள் அடங்கிய குழுவை தமிழக அரசு சமீபத்தில் அமைத்தது. அக்குழு 9 மாதங்களில் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு அரசு ஊழியர், ஆசிரியர் சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம் சார்பில் தலைமைச் செயலக பணியாளர்கள் கறுப்பு பட்டை அணிந்து பணியாற்றும் போராட்டம் நடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி, நேற்று தலைமைச் செயலக பணியாளர்கள் பெரும்பாலானோர் கறுப்பு பட்டை அணிந்து பணியாற்றினர்.

# J.M.J media வின் அனுசரணையுடன் நடந்த மாணவர்களுக்கான விஷேட நிகழ்ச்சி



J.M.J மீடியாவின் ஆனது சமூகத்திற்கு தேவையான பல விடயங்களைJ.M.J மீடியாவின் இன் பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலைமையின் கீழ் நடத்தி வருகின்ற நிலைமையில் இம்முறை JMJ மீடியாவின் அனுசரணையுடன் இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தின்JMJ மீடியாவின் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் ஹிக்மத் இலவசக் கல்வி மையத்தின் ஸ்தாபகருமான முனாஸ் ஜமால்தீனின் ஏற்பாட்டில் தி/கிண்ணியா அல் - அதான் மகா வித்தியாலயத்தில் 2025.02.07ஆம் திகதி மாணவர்களுக்கான ஊக்குவித்தல் நிகழ்ச்சியும் போதைப்பொருள் தடுப்பு , சுயதொழில் மற்றும் திறன்களை வளர்த்தல் பற்றிய நிகழ்வு வெகுசிறப்பாக நடந்தது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் இந்தியாவில் இருந்து வருகை தந்த கவி மலர் பைந்தமிழ்ச் சங்கத்தின் தலைவி ரித்து சூர்யா, நேத்ரா தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஸ்ரீநாகவாணி ராஜா, நீர்கொழும்பைச் சேர்ந்த நிஸ்வத் நிஸ்பர்(பண்முக ஆர்வளர்) மற்றும் கிண்ணியாவைச் சேர்ந்த கவிதாயினி ஆசிரியர் மைமூனா மூசா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்தோடு தி/ இக்ரா வித்தியாலயம் மற்றும் ஹிக்மத் இலவசக் கல்வி மையம் சென்று மாணவர்களின் வளர்ச்சிக்கான அறிவுரைகளும் வழங்கி வைக்கப்பட்டது.

# அம்மா மருந்தகங்கள் ஒருபோதும் மூடப்படாது: கூட்டுறவு துறை செயலர் ராதாகிருஷ்ணன் உறுதி



திருச்சி: தமிழகத்தில் அம்மா மருந்தகங்கள் மூடப்படாது என்று கூட்டுறவு மற்றும் உணவுத் துறைச் செயலர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

திருச்சியில் ரேஷன் கடைகள் மற்றும் புதிதாக அமைக்கப்படும் முதல்வர் மருந்தகத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட ராதாகிருஷ்ணன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: முதல்வர் மருந்தகம் இம்மாத இறுதிக்குள் தொடங்கப்படும். இங்கு 186 தரமான மருந்துகள் விற்கப்படும். இவற்றில் 90 சதவீதம் ஜெனரிக் மருந்துகளாகும். இங்கு சித்தா, ஹோமியோபதி மருந்துகளும் கிடைக்கும்.

மொத்தம் திறக்கப்பட உள்ள 1,000 மருந்தகங்களுக்கு 300 தனி நபர்கள் உரிமம் பெற்றுள்ளனர். அதேபோல, 440 சங்கங்கள் உரிமம் பெற்றுள்ளன. இன்னும் 402 பேர் உரிமம் பெற உள்ளனர். 898 கடைகள் தயார் நிலையில் உள்ளன. முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படுவதால், அம்மா மருந்தகங்கள் ஒரு போதும் மூடப்படாது. அவை தொடர்ந்து செயல்படும்.

முதல்வர் மருந்தகங்களில் பொது மருந்துகள் 10 சதவீதம் விலை குறைவாக கிடைக்கும். இவற்றின் மூலம் மக்களின் மருத்துவச் செலவு மாதம் ரூ.1,500 முதல் ரூ.2,000 வரை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

11.98 லட்சம் டன் நெல்: திருச்சி அடுத்த பூங்குடி கிராமத்தில் நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பார்வையிட்ட ராதாகிருஷ்ணன், அங்கு செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் கடந்த செப்.1 முதல் நேற்று முன்தினம் வரை 2,560 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 1.66 லட்சம் விவசாயிகளிடமிருந்து, 11.98 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ரூ.2,603.14 கோடி செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பாண்டில் 3,50,321 டன் நெல் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு



திருநெல்வேலி மாவட்டம் பேட்டை காமராஜர் நகர் மன்ற மேல்நிலைப் பள்ளியில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது நிகழ்ச்சிக்கு பட்டதாரி ஆசிரியர் பக்கீர் மைதீன் தலைமை தாங்கினார் முதுகலை வரலாறு ஆசிரியர் தனுஷ்கோடி அவர்கள் கொத்தடிமை முறை குறித்து மாணவர்களுக்கு சிற்றுரை ஆற்றினார் முதுகலை பொருளாதார ஆசிரியர் பொன்னுசாமி உறுதிமொழி வாசிக்க மாணவர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர் நிகழ்ச்சியில் மாணவர்கள் இடைநிலை ஆசிரியை திருமதி உமா மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்

# ரயிலில் இருந்து தள்ளிவிடப்பட்ட கர்ப்பிணியின் கருவில் இருந்த சிசு உயிரிழப்பு



வேலூர்: காட்பாடி அருகே ஓடும் ரயிலில் இருந்து தள்ளி விடப்பட்ட கர்ப்பிணி ரேவதியின் கருவில் 4 மாத சிசு இறந்ததால் பாதுகாப்புடன் அகற்ற மருத்துவர்கள் நடவடிக்கை எடுத்தனர். ரயில்களில் பெண்கள் பெட்டியில் தனி ஒரு பெண் பயணித்தால் காவலர் உடன் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே எஸ்பி ஈஸ்வரன் தெரிவித்தார்.


ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர் ஜெமினி (41). இவரது மனைவி ரேவதி (36). இருவரும் திருப்பூரில் உள்ள பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகின்றனர். ரேவதி கர்ப்பிணியாக இருப்பதால் மருத்துவ பரிசோதனைக்காக தனது தாயார் வீடான சித்தூர் மாவட்டத்துக்கு செல்வதற்காக கோவையில் இருந்து காட்பாடி வழியாக திருப்பதி வரை செல்லும் இன்டர்சிட்டி விரைவு ரயிலில் பொது வகுப்பு பெட்டியில் வியாழக்கிழமை காலை புறப்பட்டார்.

இந்த ரயில் பகல் 12 மணியளவில் வேலூர் மாவட்டம், காவனூர் - விரிஞ்சிபுரம் இடையே சென்று கொண்டிருந்தது. அப்போது, பெண்கள் பெட்டியில் தனியாக பயணித்த ரேவதியிடம் அதே பெட்டியில் இருந்த ஆண் ஒருவர் பாலியல் ரீதியாக தவறாக நடக்க முயன்றுள்ளார். அவரிடம் இருந்து தப்பிக்க முயன்ற ரேவதியின் கையை முறுக்கி ஓடும் ரயிலில் இருந்து கீழே தள்ளியுள்ளார். இதில், படுகாயம் அடைந்த அவரை இருப்புப்பாதை பராமரிப்பு பணியில் இருந்த கேங்க்மேன் ஒருவர் அருகில் இருந்த வீட்டில் வசித்த பொதுமக்கள் உதவியுடன் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு எலும்பு முறிவுக்கான அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். மேலும், அவரது உடல் நிலையை தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

இதுதொடர்பான தகவலின் பேரில் ஜோலார்பேட்டை ரயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து ரேவதிக்கு பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்ததுடன் அவரை ஓடும் ரயிலில் இருந்து கீழே தள்ளியதாக வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் அடுத்த பூஞ்சோலை கிராமத்தைச் சேர்ந்த ஹேமராஜ் (30) என்பவரை நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) கைது செய்தனர்.

பாதிக்கப்பட்ட ரேவதிக்கு ரூ.50 ஆயிரம் கருணை தொகை வழங்கப்படும் என தெற்கு ரயில்வே நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ரேவதியை சென்னை கோட்ட ரயில்வே முதுநிலை மேலாளர் பரத்குமார், கூடுதல் கோட்ட மேலாளர் பிரதாப் சிங் மற்றும் சந்திரகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று (பிப்.08) நேரில் சந்தித்து ரேவதியிடம் நலம் விசாரித்தனர். மேலும், கருணைத்தொகையாக அறிவிக்கப்பட்டிருந்த 50 ஆயிரத்தை வழங்கினர்.

# சவுதி அரேபியாவில் இந்திய தொழிலாளர்கள் எண்ணிக்கை 2023-24-ல் 2 லட்சம் உயர்ந்தது



சவுதி அரேபியாவில் பணியாற்றும் இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை கடந்த நிதியாண்டில் (2023-24) இரண்டுலட்சம்உயர்ந்துள்ளது.

மேற்கு ஆசிய நாடான சவுதி அரேபியாவில் கட்டுமானம், உள்கட்டமைப்பு, சேவைகள் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியால் பதிவுசெய்யப்பட்ட இந்திய நிறுவனங்களின் எண்ணிக்கை 2023-24-ல் 3 ஆயிரமாக உயர்ந்துள்ளது. அதேவேளையில் அங்கு பணியாற்றும் இந்திய தொழிலாளர் எண்ணிக்கை 2 லட்சம் அதிகரித்து, 26.5 லட்சமாக உயர்ந்துள்ளது.

இது, முந்தைய நிதியாண்டை விட 10 சதவீத உயர்வு ஆகும். இதுபோல் நடப்பு நிதியாண்டிலும் (2024-25) இந்திய தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

இதுகுறித்து சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் உள்ள இந்தியத் தூதர் சுகல் அஜாஸ் கான் கூறுகையில், “சவுதி அரேபியாவில் உள்ள இந்திய சமூகத்தினர் இரு நாடுகளுக்கும் இடையே உயிரோட்டமுள்ள பாலமாக விளங்குகின்றனர். சவுதி அரேபியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியர்களின் பங்களிப்பு பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது” என்றார்.

2030-ம் ஆண்டு தொலைநோக்கு திட்டத்தின் கீழ் எண்ணெய் அல்லாத வருவாயை அதிகரிப்பதை நோக்கி சவுதி அரசு நகர்ந்து வருகிறது. இதனால் உற்பத்தி, சுற்றுலா, பசுமை எரிசக்தி போன்ற துறைகளில் வெளிநாட்டினர் உட்பட அதிக நிபுணர்களை பணியமர்த்துவதில் கவனம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில் சவுதி அரேபிய அரசின் தகாமோல் ஹோல்டிங் என்ற மனித வள நிறுவனத்துடன் இந்திய அரசு திறன் சரிபார்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன்படி கடந்த 2022-ம் ஆண்டு முதல், இந்தியாவின் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் இந்திய தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கி வருகிறது.

இதனால் திறமையான ஆட்களை சவுதி அதிகாரிகள் பணியில் அமர்த்தி வருகின்றனர். மேலும் பணியமர்த்தும் செயல்முறையை நெறிப்படுத்திலும் பணியாளர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த 2019-ல் சவுதி அரேபியாவில் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனங்களின் எண்ணிக்க 400 ஆக இருந்தது. இது 2023 ஆகஸ்டில் 3 ஆயிரமாக அதிகரித்து மொத்த முதலீடு 3 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

# நுகர்வோர் நீதிமன்றங்களில் காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காதது ஏன்? - தமிழக அரசுக்கு தலைமை நீதிபதி கேள்வி

சென்னை: மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களில் உள்ள காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காதது குறித்து பிப்.14-ம் தேதிக்குள் தமிழக அரசு பதிலளிக்க வேண்டும் என உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டுள்ளது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பாதது தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை மேற்கொண்டது.

இந்நிலையில் இந்த வழக்கு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் மற்றும் நீதிபதி முகமது ஷபீக் ஆகியோர்அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் சரத்சந்திரன் நுகர்வோர் நீதிமன்றங்களின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்தார்.

அதில், கடந்தாண்டு இறுதிவரை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் 3,900 வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், சென்னை மற்றும் மதுரை கிளையில் தலைவர்கள் மட்டுமே பணியில் இருப்பதாகவும், தேவையான உறுப்பினர்களோ, ஊழியர்களோ இல்லை என்றும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், காலியிடங்களையும், ஆராய்ச்சி உதவியாளர்களையும் நிரப்புவது அத்தியாவசிய தேவை என்றும் கூறியிருந்தார்.

நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் மாநில அரசு ப்ளீடர் ஏ.எட்வின் பிரபாகர் ஆஜராகி, ‘‘மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் பதிவாளர் உள்பட 230 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டவை. இதில் 24 பணியிடங்கள் மட்டும் காலியாக உள்ளன. இவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது’’ என தெரிவித்தார்.

அதையடுத்து நீதிபதிகள், ‘‘மாநில குறைதீர் ஆணையத்தின் பணிச்சுமையை குறைக்க கூடுதலாக ஒரு உறுப்பினரை நியமிக்கக் கோரி அரசுக்கு ஆணையத்தின் தலைவர் கடந்த 2022 டிச.15 மற்றும் 2023 மார்ச் 20 ஆகிய தேதிகளில் கடிதம் எழுதியுள்ளார். அதற்கு, நிதி நெருக்கடி காரணமாக, கூடுதலாக ஒரு உறுப்பினரை நியமிக்க முடியாது என ஆணையத் தலைவருக்கு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் கடந்த 2023 மே 5 அன்று பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதன்பிறகு கடந்த 22 மாதங்களாக இதுதொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காதது அதிருப்தியளிக்கிறது. நுகர்வோர் நலனில் அரசுக்கு அக்கறையின்மையையே இது காட்டுகிறது. எனவே இதுதொடர்பாக பிப்.14-ம் தேதிக்குள் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் கூடுதல் தலைமைச் செயலர் உரிய விளக்கமளிக்க வேண்டும்’’ என உத்தரவிட்டு விசாரணையை பிப்.20-க்கு தள்ளிவைத்துள்ளனர்.

# தலைநகர் டெல்லியைபோல 2026-ல் தமிழகத்தில் தாமரை மலரும்: தமிழிசை நம்பிக்கை



சென்னை: தலைநகர் டெல்லியைபோல 2026-ல் தமிழகத்தில் தாமரை மலரும் என தமிழிசை சவுந்தரராஜன் நம்பிக்கை தெரிவித்தார்.

டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் பாஜக வெற்றிப் பெற்றதை தொடர்ந்து, சென்னை தி.நகரில் உள்ள பாஜக மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் பாஜக தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர். இதில், முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மாநில துணை தலைவர் கரு. நாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் தமிழிசை சவுந்தரராஜன் கூறியதாவது: தலைநகரில் பாஜக தலைநிமிர்கிறது. ஆம் ஆத்மி தலைகுனிகிறது. காங்கிரஸ் நிலை குலைகிறது. டெல்லி சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தமிழகத்தில் இருந்து நிறைய பாஜக தலைவர்கள் அங்கு பிரச்சாரம் மேற்கொண்டனர். வளர்ச்சிக்கான திட்டங்களை பாஜக முன்னெடுத்து செல்லும் என்பதற்காக, தலைநகர் மக்கள் பாஜகவுக்கு வாக்களித்துள்ளனர். தலைநகரிலே தாமரை மலரும்போது, 2026-ல் தமிழகத்திலும் தாமரை மலரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது.

ஊழலை ஒழிப்போம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த கேஜ்ரிவால், ஊழல் குற்றச்சாட்டினாலே, சிறை சென்றார். தலைநகரில் எந்த ஒரு வளர்ச்சியையும் அவர் தரவில்லை. இண்டியா கூட்டணி ஒரு தேர்தலைகூட ஒற்றுமையாக எதிர்கொள்ளவில்லை. அதனால், காங்கிரஸால் ஒரு இடத்தில்கூட வெற்றி பெற முடியவில்லை. இதை நினைத்து திமுக வருத்தப்பட வேண்டும். அதனால், ஈரோடு தேர்தல் வெற்றியைகூட அவர்களால் கொண்டாட முடியாததாக சூழ்நிலையில் இருக்கின்றனர்.

பட்டியலின மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளில் பாஜகவுக்கு பெரும்பான்மை கிடைத்துள்ளது. இஸ்லாமிய மக்கள் வாழும் இடங்களில் கூட 4 இடங்களில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. எனவே, பாஜக, ஒரு குறிப்பிட்ட மதத்துக்கும், சமூகத்துக்கும் எதிரானவர்கள் என்ற பொய் பிரச்சாரம் இனி எடுபடாது. திருமாவளவன் இன்னும் தன்னை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இன்னும் பல அதிர்ச்சி அவருக்கு வரும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஏழை, எளிய மக்களுக்கு விரோதமான பட்ஜெட்: நகல் எரிப்பு போராட்டத்தில் டி.ராஜா குற்றச்சாட்டு




சென்னை: 'மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் ஏழை, எளிய மக்களுக்கு விரோதமானது. எனவே, அதை நிராகரிக்க வேண்டும்' என, இந்திய கம்யூனிஸ்ட் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா வலியுறுத்தி உள்ளார்.

ஏழை, எளிய, நடுத்தர மக்களை சுரண்டும் மத்திய அரசின் பட்ஜெட்டைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் சார்பில், பட்ஜெட் நகல் எரிப்பு போராட்டம் சென்னை, பாரிமுனையில் நேற்று நடைபெற்றது. கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் போராட்டத்துக்கு தலைமை வகித்தார். பட்ஜெட் நகலை எரித்து போராட்டத்தை தொடங்கி வைத்து, கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் டி. ராஜா பேசியதாவது:

மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் ஏழை, எளிய மக்களுக்கு விரோதமானது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. விலைவாசி பன்மடங்கு உயர்ந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. பணவீக்கம் அதிகரித்துள்ளதோடு, ரூபாயின் மதிப்பு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக மோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சினைகளை இப் பட்ஜெட் எந்த வகையிலும் அணுகவில்லை. எனவே, இதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் பட்ஜெட் நகல் எரிப்பு போராட்டம் நடைபெறுகிறது.

தமிழகத்தில் இருந்து ஜிஎஸ்டி வருவாய் அதிகளவில் மத்திய அரசுக்கு செல்கிறது. ஆனால், தமிழக அரசு நிதி கேட்கும்போது அதை தர மத்திய அரசு மறுக்கிறது. அத்துடன், தமிழகத்துக்கு எதிராக பல்வேறு முடிவுகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. இந்த பட்ஜெட் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், பெரிய தொழிலதிபர்களுக்கும் சாதகமானது. எனவே, இந்த பட்ஜெட்டை நிராகரிக்க வேண்டும். இந்தியக் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகள் இந்த பட்ஜெட்டை எதிர்த்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளன.

காப்பீட்டுத் துறையில்கூட இன்றைக்கு 100 சதவீதம் அந்நிய முதலீடு அனுமதிக்கப்படுகிறது. அதேபோல், விண்வெளி ஆராய்ச்சித் துறையில் தனியார் பங்களிப்பு அனுமதிக்கப்படுகிறது. இதன்மூலம், அனைத்து துறைகளும் தனியார்மயமாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருமானத்தை 2 மடங்கு உயர்த்துவோம் என பிரதமர் மோடி வாக்குறுதி அளித்தார். ஆனால், விவசாயிகள் இன்றைக்கு கடன் தொல்லையால் தற்கொலை செய்து வருகின்றனர். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சட்டரீதியான குறைந்தபட்ச ஆதார விலையை வழங்க வேண்டும் என்று போராடுகிறார்கள். ஆனால், அது கொடுக்கப்படவில்லை.

கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிப்பது மற்றும் நகர்ப்புறத்திலும் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைகளுக்கு மத்திய அரசு செவிசாய்க்கவில்லை.

அதேபோல், விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும், பொதுவிநியோக திட்டத்தை வலுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றவும் மத்திய அரசு தயாராக இல்லை. இவ்வாறு டி.ராஜா பேசினார்.

இப்போராட்டத்தில், கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# 4 ஆண்டுகளில் 6 ஆணையர் மாற்றத்தால் தள்ளாடும் மதுரை மாநகராட்சி நிர்வாகம்!




மதுரை: மதுரை மாநகராட்சியில் ஆணையர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதால் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நிர் வாகம் தள்ளாடும் நிலை ஏற்பட்டுள்ளது. நகராட்சியாக இருந்த மதுரை கடந்த 1971-ம் ஆண்டு மே 1-ல் மாநகராட்சியாக மாறியது. 72 வார்டுகள் இருந்தநிலையில், கடந்த 2011-ம் ஆண்டு மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள், 11 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு வார்டுகள் எண்ணிக்கை 100 ஆக உயர்த்தப்பட்டது.

இணைக்கப்பட்ட புறநகரின் 28 வார்டுகளில் வசிக்கும் மக்களுக்கே14ஆண்டுகளுக்குப் பின்பு தற்போதுதான் புதிய பாதாள சாக்கடை, புதிய சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அடிப்படை வசதிகள் செய்யாமலேயே சொத்து வரி மட்டும் பழைய மாநகராட்சி 72 வார்டுகளுக்கு இணையாக நிர்ணயம் செய்து வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில் புதிதாக மேலும் 16 ஊராட்சிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட உள்ளது. இந்த விரிவாக்கம் மூலம் வார்டுகள் எண்ணிக்கை 120 ஆக உயரவிருக்கிறது. மாநகராட்சியுடன் சுற்றிலும் உள்ள ஊராட்சிகளை இணைப்பது மட்டுமே குறிப்பிட்ட கால இடைவெளியில் நடக்கிறது.

ஆனால், இணைக்கப்படும் புறநகர் ஊராட்சி களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. மாநகராட்சியின் ஒவ்வொரு மண்டல அலுவலகங்களில் உள்ள உதவி ஆணையர்கள் முதல் ஆணையர் வரை அடிக்கடி மாற்றப்படுவது முக்கியக் காரணம் எனக் கூறப்படுகிறது.

குறிப்பாக 2021 முதல் தற்போது வரை 4 ஆண்டுகளில் 6 ஆணையர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதில், ஆணையராக இருந்த விசாகனை தவிர மற்ற அனைத்து ஆணையர்களும் குறைந்தபட்சம் 6 மாதம் முதல் ஓராண்டுக்குள்ளாகவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய ஆணையராக வரக்கூடியவர்கள் மதுரையின் அரசியல் பின்னணி, மக்களுடைய வாழ்வியல், அவர்களுக்கான அத்தியாவசியத் தேவைகள், மேம்படுத் துவதற்கான கட்டமைப்பு வசதிகளைத் தெரிந்து கொள்வதற்குள்ளாகவே இடமாற்றம் செய்யப்பட்டு விடுகின்றனர்.

கடைசியாக இட மாற்றம் செய்யப் பட்ட ஆணையர் தினேஷ்குமார் தனது பணிக்காலத்தை ஓராண்டு நிறைவு செய்வதற்குள் ஆட்சியராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுவிட்டார். மாநகராட்சி ஆணையராக வரக்கூடியவர்களை குறைந்தபட்சம் 2 முதல் 3 ஆண்டுகள் வரையாவது பணியாற்ற அனுமதித்தால் மட்டுமே அவர்கள் மதுரை மாநகராட்சியை முன்னேற்றத்துக்குக் கொண்டு செல்ல முடியும். மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியும்.

ஆனால், ஆணையர்கள் அடிக்கடி மாற்றம் செய்யப்படுவதால் வரி வருவாய் குறைவது, புதிய வருவாய் இனங்களைக் கண்டறிவது, சிறப்பான கட்டமைப்புகளை உருவாக்குவது, சுகாதாரம் போன்ற அனைத்துப் பணிகளும் பாதிக்கப்படுகின்றன.

அதனால், சென்னைக்கு அடுத்து இரண்டாவது மாநகராட்சியாக இருந்த மதுரை, தற்போது கோவை, திருச்சிக்கு அடுத்தநிலையில் உள்ளது. புதிதாக வரக்கூடிய ஆணையர்கள் மாநகராட்சியைப் பற்றி தெரிந்து கொள்வதற்கே குறைந்தபட்சம் 6 மாதங்கள் ஆகிவிடும். அதனால், தற்போது வந்துள்ள புதிய ஆணையரையாவது குறைந்தபடசம் 2 ஆண்டு கள் பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரி களிடம் கேட்டபோது, ''முல்லை பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டம் தற்போது வரை தாமதமாவதற்கு ஆணையர்களை அடிக்கடி இடமாற்றம் செய்வது தான் முக்கியக் காரணம். குடிநீர் திட்டப்பணிகள், ஆணையராக இருந்த மதுபாலன், தினேஷ்குமார் ஆகியோர் பணியாற்றிய காலத்தில்தான் விரைவாக நடந்தது. தற்போது புதிதாக வந்த ஆணையர் சித்ரா ஆர்வத்துடன் கேட்டு தெரிந்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு குடிநீர் திட்டப் பணிகளை லோயர் கேம்ப் பகுதிக்கு சென்று ஆய்வு செய்தார்,'' என்றனர்.

ஓராண்டுகூட பணியில் இல்லை: 2019 முதல் 2021 ஜூன் வரை ஆணையராக விசாகன் பணியாற்றினார். இவரது இடமாற்றத்துக்குப் பின் கார்த்திகேயன் பொறுப்பேற்றார். 11 மாதங்களில் கார்த்திகேயனுக்கு பதிலாக சிம்ரன் ஜீத் சிங் காலோன் நியமிக்கப்பட்டு 2022 ஜூனில் பொறுப்பேற்றார். இவர் 2023 அக்டோபரில் இடமாற்றம் செய்யப்பட்டார். 2023 ஜூனில் பிரவீன்குமார் பொறுப்பேற்று பணியாற்றி வந்த நிலையில், அதே ஆண்டு அக்டோபரில் இடமாற்றம் செய்யப் பட்டார். அதற்குப் பின் மதுபாலன், 2023 அக்டோபர் 9-ம் தேதி பொறுப்பேற்றார். இவர் 2024 பிப்ரவரியில் இடமாற்றம் செய்யப்பட்டார். இவருக்குப் பதிலாகப் பொறுப்பேற்ற தினேஷ்குமார், ஓராண்டு நிறைவு செய்வதற்கு 10 நாள் இருக்கும் நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டார்.

# பக்தியை வைத்து தமிழக மக்களை ஏமாற்றி விட முடியாது - அமைச்சர் எஸ்.ரகுபதி கருத்து

புதுக்கோட்டை: ''பக்தியை வைத்து தமிழக மக்களை ஏமாற்றிவிட முடியாது'' என மாநில சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியுள்ளர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் திமுக தெற்கு மாவட்டத்தின் சார்பில் மத்திய பட்ஜெட்டைக் கண்டித்து இன்று (பிப்.8) இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியது: ''தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங்களை, பாரபட்சமின்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். ஆனால், மத்திய அரசு தனது பட்ஜெட்டில் வரி குறைவாக செலுத்தும் மாநிலங்களுக்கு நிதி அதிகமாகவும், அதிகம் வரி செலுத்தும் தமிழகத்துக்கு நிதி குறைவாகவும் ஒதுக்கி பாரபட்சத்தோடு மத்திய அரசு நடந்து கொண்டுள்ளது. மோடி பிரதமரான பிறகுதான் இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. புதிய ரயில்வே திட்டங்கள், மேம்பாலங்கள், மெட்ரோ ரயில் திட்டங்கள் எதுவும் தமிழகத்துக்கு வழங்கப்படவில்லை.

திமுக அரசு மீது வீண் விமர்சனங்களை முன்வைக்கும் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, மத்திய அரசிடம் இருந்து ஒரு திட்டத்தையாவது பெற்றுத் தந்தாரா? தமிழக அரசுக்கு எதிராக எந்தக் குறையையும் யாரும் சொல்லவில்லை. மக்களின் ஆதரவு அலைதான் வீசுகிறது. பக்தியை வைத்து தமிழக மக்களை ஏமாற்றி விட முடியாது. ஏனெனில், அவர்கள் பழநிக்கு பாதயாத்திரையும் செல்வார்கள். திராவிட மாடல் அரசுக்கு வாழ்த்தும் சொல்வார்கள்'' என்றார்.

இதேபோல, திமுக வடக்கு மாவட்டம் சார்பில் விராலிமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சர்ச்சை: வடக்கு மாவட்டத்தின் சார்பில் விராலிமலையில் நடைபெற்ற பொதுக்கூட்ட நோட்டீஸில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மெய்யநாதன் பெயர் இடம் பெற்றிருந்த நிவையில், ஆலங்குடி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட திமுக தெற்கு மாவட்டத்தின் சார்பில் அறந்தாங்கியில் நடைபெற்ற பொதுக்கூட்ட நோட்டீஸில் அமைச்சர் மெய்யநாதன் அச்சிடப்படாதது குறித்து சமூக வலைதளங்களில் அவரது ஆதரவாளர்கள் கடந்த 2 நாட்களாக எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

# மதுரை அருகே மலைச்சரிவில் 800 ஆண்டு தொன்மையான பாண்டியர் கல்வெட்டு



மதுரை: மதுரை அருகே மலைச்சரிவில் 800 ஆண்டுகள் தொன்மையான, பாண்டியர் கால கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலூர் வட்டம் கருங்காலக்குடி அருகேயுள்ள கம்பூர் கிராமத்தில் உள்ள மலைச்சரிவில் இரண்டு கல்வெட்டுகள் அடுத்தடுத்து செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்த தொல்லியல் ஆய்வாளர்கள் அறிவுச்செல்வம், கதிரேசன் ஆகியோர் கூறியதாவது:

முதல் கல்வெட்டு நாலரை அடி நீளம், 3 அடி உயரம், 15 வரிகள் கொண்டுள்ளது. இதில், "மாறவர்மன் சுந்தர பாண்டியனின் ஏழாம் ஆட்சி ஆண்டில், துவராபதி நாடு (இன்றைய நத்தம் பகுதி) எறிபடைநல்லூர் உடையார் ஈஸ்வரத்து இறைவனுக்கு படைத்தலைவன் பாஸ்கரன் என்பவன் நிலக்கொடை அளித்து, அதில் ஒரு மா அளவு நிலத்துக்கு வரும் வரியைத் கொண்டு கடமை, அந்தராயம் போன்ற வரிகளும் செலுத்தி, திரமம் என்னும் காசு ஒன்றும் கோயிலுக்கு தானமாகக் கொடுத்துள்ளான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது கல்வெட்டு 6 அடி நீளம், 3 அடி உயரம், 14 வரிகள் கொண்டது. இதே பாண்டிய மன்னரின் 12-வது ஆட்சி ஆண்டில் பாஸ்கரன் என்னும் படைத்தலைவனுக்கு கம்பவூர் மக்களும், அப்பகுதியில் அதிகாரியாக இருந்த தென்னகங்க தேவனும் சேர்ந்து பிள்ளையாருக்கு சிறப்பு பூஜை செய்வதற்காக ஒரு மா நிலம் நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கிறது.

தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம் கல்வெட்டை வாசித்து விளக்கினார். பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தைச் சேர்ந்த உதயகுமார், முத்துப்பாண்டி ஆகியோர் கல்வெட்டை மைபடி எடுத்தனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# பழைய ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தாவிட்டால் 2026 தேர்தலில் அரசு ஊழியர்கள் மாற்று முடிவை எடுப்பார்கள்: சிபிஎம்



புதுக்கோட்டை: பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தாவிட்டால் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மாற்று முடிவை எடுப்பார்கள் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறிதாவது: சட்டப்பேரவைத் தேர்தலின்போது பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவோம் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததால், திமுக அரசு மீது ஆசிரியர்கள், அரசு ஊழிர்கள் அதிருப்தியில் உள்ளனர். எனவே, வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்குள் இந்தக் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால், வரும் தேர்தலில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மாற்று முடிவை எடுப்பார்கள்.

குறிப்பிட்ட பிரச்சினையில் எதிர்ப்பு தெரிவிப்பதாலேயே கூட்டணி முறிந்துவிடும் என்ற முடிவுக்கு வரத் தேவையில்லை. ஒவ்வொரு பிரச்சினையிலும் எங்களுக்கென தனி நிலைப்பாடு இருக்கிறது. கூட்டணியில் இருக்கிறோம் என்பதற்காக, எல்லா பிரச்சினையிலும் ஒத்துப்போக வேண்டிய அவசியமில்லை.

வேங்கைவயல் விவகாரத்தில் விசிக மட்டுமின்றி, நாங்களும் அதிருப்தியில் இருக்கிறோம். இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். வனவிலங்குகளால் பயிர்கள் அழிக்கப்படும்போது, அதை இயற்கைப் பேரழிவாக கருதி, விவசாயிகளுக்கு முழு இழப்பீடு வழங்க வேண்டும். மேலும், சாகுபடிப் பகுதிக்குள் விலங்குகள் வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பரங்குன்றம் விவகாரத்தைப் பொருத்தவரை, ஹெச்.ராஜா உள்ளிட்ட இந்து அமைப்பினர் பேசியவை கண்டனத்துக்குரியவை.

மத நல்லிணத்தைக் காப்பாற்றும் வகையில், அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் வழிபாட்டு உணர்வை, அரசியல் லாபத்துக்காக பாஜக பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# இண்டியா கூட்டணியின் பலவீனத்தால் டெல்லியில் பாஜக வெற்றி - அமைச்சர் பொன்முடி கருத்து



விழுப்புரம்: "ஈரோடு இடைத்தேர்தல் வெற்றி 2026 தேர்தலுக்கான முன்னோட்டமாகும். 2026-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் மட்டுமல்ல, நிரந்தரமாக திமுகவே வெற்றி பெறும். இண்டியா கூட்டணியின் பலவீனத்தால் டெல்லியில் பாஜக வெற்றி பெற்றது" என்று தமிழக வனத்துறை அமைச்சர் பொன்முடி கூறியுள்ளார்.

திண்டிவனத்தில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தை முழுமையாக புறக்கணித்துள்ள பாஜக அரசை கண்டித்து இன்று (பிப்.8) மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வந்த வனத்துறை அமைச்சர் பொன்முடி முன்னதாக செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியது: "கடந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழக அரசின் சாதனைகளுக்கு கிடைத்த பரிசே ஈரோடு இடைத்தேர்தல் வெற்றியாகும். இந்த வெற்றியால், 2026 தேர்தலில் 234 தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெறும். சீமான் பாஜக வாக்கை பெறுவதற்காகத்தான் பெரியாரை எதிர்த்து பேசி 24 ஆயிரம் வாக்குகள் பெற்று டெபாசிட் தொகையை இழந்துள்ளார். ஈரோடு இடைத்தேர்தலில், திமுக சார்பில் போட்டியிட்ட சந்திரகுமார், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வாங்கியதை விட கூடுதல் வாக்குகள் என 75 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார் . அதிமுகவினர் வாக்குகளான சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் நோட்டாவுக்கு சென்றுள்ளது. ஈரோடு இடைத்தேர்தல் வெற்றி 2026 தேர்தலுக்கான முன்னோட்டமாகும். 2026-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் மட்டுமல்ல, நிரந்தரமாக திமுக வெற்றி பெறும். இண்டியா கூட்டணியின் பலவீனத்தால் டெல்லியில் பாஜக வெற்றி பெற்றது" என்று அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது, எம்எல்ஏ மஸ்தான், மாவட்ட செயலாளர் சேகர், முன்னாள் எம்எல்ஏ-க்கள் செந்தமிழ் செல்வன், குத்தாலம் கண்ணன், மாசிலாமணி, சேதுநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# திரைப்படத்தை வியாபாரம் செய்வது கடினம்! - 2கே லவ் ஸ்டோரி விழாவில் தனஞ்செயன் தகவல்




சுசீந்திரன் இயக்கியுள்ள படம், 2கே லவ் ஸ்டோரி, ஜெகவீர நாயகனாக அறிமுகமாகும் இதில் மீனாட்சி கோவிந்தராஜன் நாயகியாக நடிக்கிறார். பால சரவணன், ஆண்டனி பாக்யராஜ், ஜெயப்பிரகாஷ், வினோதினி என பலர் நடித்துள்ளனர். டி. இமான் இசையமைத்துள்ளார். திருமண போட்டோ எடுக்கும் இளைஞர்களின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள படம் இது. சிட்டி லைட் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்தப் படம் பிப் 14-ம் தேதி வெளியாகிறது. இதன் இசை வெளியீட்டு விழா சென்னையில் நேற்று முன் தினம் நடந்தது.

விழாவில் தயாரிப்பாளர் தனஞ்செயன் பேசும்போது, "திட்டமிடலில் இயக்குநர் சுசீந்திரனை மிஞ்ச முடியாது. அதுதான் அவரிடம் இருக்கும் சிறப்பு. ஒரு படத்தை எப்படிக் குறுகிய காலத்தில் முடிக்க முடியும் என்பதை, அவரிடம் கற்றுக் கொள்ளலாம். ஒரு படத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, செலவினங்களை இழுத்துவிட்டு, இறுதியில் படத்திலும் ஒன்றும் இல்லாமல், செலவையும் அதிகமாக்கிவிடும் இயக்குநர்கள் இந்த காலத்தில் இருக்கிறார்கள். அதை உடைத்துத் திட்டமிடலில் சாதித்துக் காட்டுகிறார் சுசீந்திரன். ஒரு படத்தைத் தயாரிப்பது மிக எளிது அதை வியாபாரம் செய்வது என்பது மிகவும் கடினம். இந்த திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைத் தரட்டும்" என்றார்.

இயக்குநர் சுசீந்திரன் பேசும் போது, "வெண்ணிலா கபடி குழு படத்துக்குப் பிறகு இதுவும் என் முதல் படம் போன்ற உணர்வைத் தந்துள்ளது. இந்தப் படத்தை நண்பர்கள் இயக்குநர்களுக்குப் போட்டுக் காட்டினேன் பார்த்து விட்டு வாழ்த்தியதற்கு நன்றி" என்றார்.

இயக்குநர்கள் செல்லா அய்யாவு, திரு, ராஜேஷ்வர் காளிசாமி, ஹரிஹரன், எஸ். ஆர்.பிரபாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மார்கோ படக் குழுவினருக்கு சூர்யா வாழ்த்து






மார்கோ படம் பார்த்துவிட்டு படக்குழுவினருக்கு சூர்யா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மலையாளத்தில் வெளியான 'மார்கோ' திரைப்படம் இந்தியளவில் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நிலையில், இப்படத்தை பார்த்துவிட்டு திரையுலகினர் பலரும் படக்குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்தார்கள். தற்போது சூர்யாவும் படம்பார்த்துவிட்டு படக்குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அதன் நாயகன் உன்னி முகந்தன் மற்றும் ஹனிஃப் அடினி ஆகியோருக்கு பூங்கொத்து அனுப்பி தனது வாழ்த்தை பகிர்ந்திருக்கிறார்.

கடந்த ஆண்டு டிசம்பர் 20-ம் தேதி வெளியான இப்படத்தில் ரத்தம் தெறிக்கும் சண்டைக் காட்சிகளை மக்கள் கொண்டாடினார்கள். மலையாளத்தைத் தொடர்ந்து தமிழ், தெலுங்கு, இந்தி என அனைத்து மொழிகளிலும் டப்பிங் செய்து வெளியிட்டது படக்குழு. உலகளவில் 'மார்கோ' படம் ரூ.100 கோடி வசூலை கடந்திருப்பதாக படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

ஹனிஃப் அடினி (Haneef Adeni) இயக்கத்தில் உன்னி முகுந்தன் நடித்துள்ள இப்படத்தினை ஷெரீப் முகமது தயாரித்துள்ளார். இதற்கு தணிக்கை அதிகாரிகள் 'ஏ' சான்றிதழ் அளித்துள்ளார்கள். சுமார் 30 கோடி ரூபாய் செலவில் இப்படம் தயாரிக்கப்பட்டது.

# கார்த்தியுடன் இணையும் வடிவேலு?




கார்த்தி நடிக்கவுள்ள படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வடிவேலு உடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

'டாணாக்காரன்' இயக்குநர் தமிழ் இயக்கத்தில் கார்த்தி புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார். இதனை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்துக்கான நடிகர்கள் ஒப்பந்தம் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வடிவேலுவிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அவரும் நடிக்க சம்மதம் தெரிவிக்கவே, தற்போது சம்பளம் மற்றும் தேதிகள் தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது.

கார்த்தி - தமிழ் இணையும் படத்தின் படப்பிடிப்பு, 'சர்தார் 2' படப்பிடிப்பு முடிந்தவுடன் தொடங்கவுள்ளது. இதன் பெரும்பாலான காட்சிகள் ராமேஸ்வரத்தில் காட்சிப்படுத்த படக்குழு திட்டமிட்டு இருக்கிறது. இப்படம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. 'கார்த்தி 29' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வரும் இப்படத்தின் ஒளிப்பதிவாளராக எஸ்.ஆர். கதிர் பணிபுரியவுள்ளார்.

இந்த ஆண்டுக்குள் படப்பிடிப்பை முடித்து, 2026-ம் ஆண்டு தொடக்கத்தில் வெளியிடலாம் என்று தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. விரைவில் படப்பூஜையுடன் படப்பிடிப்பை தொடங்கவும் முடிவு செய்திருக்கிறார்கள்.

# விஷால் - சுந்தர் சி இணையும் புதிய படம் ரூ.100 கோடி பட்ஜெட்டில் உருவாகிறதா?




சுந்தர்.சி இயக்கத்தில் நடிகர் விஷால், ஆம்பள, ஆக்ஷன், மதகஜராஜா படங்களில் நடித்துள்ளார். இதில் மதகஜராஜா, 12 வருடத்துக்குப் பிறகு கடந்த பொங்கலுக்கு வெளியாகி சூப்பர் ஹிட்டானது இந்தப்படம் ரூ.50 கோடிக்கு மேல் வசூலித்து இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது. இதையடுத்து சுந்தர். சி இயக்கத்தில் விஷால் மீண்டும் நடிக்கிறார். இந்தப்படம் ரூ.100 கோடி பட்ஜெட்டில் உருவாக இருப்பதாகக்கூறப்படுகிறது. விஷால் சம்பளம் மட்டுமே ரூ.30 கோடி என்கிறார்கள்.

இதில் காமெடி வேடத்தில் நடிக்க சந்தானத்திடம் பேசி வருகின்றனர். அவர் மறுத்தால் வடிவேலு நடிப்பார் என்று கூறப்படுகிறது.

பென்ஸ் மீடியா சார்பில் ஏ.சி. அருண்குமார் வழங்க, அவ்னி சினிமேக்ஸ் தயாரிக்க இருக்கிறது. இந்த மாத இறுதியில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்க இருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே சுந்தர்.சி இயக்கத்தில் வடிவேலு நடித்துள்ள 'கேங்கர்ஸ்' படம் முடிந்துவிட்டது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066